முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1231

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.02.2023, சனிக்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
   ஞானபலம் கொண்ட தேசிகனே
   தானதர்ம சக்தி கூட்டி தரணியை மாற்ற
   தவராஜனாக வந்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும் அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் தை மாதம் 28 ம் நாள், 11.02.2023 சனிக்கிழமை)
   வரமென அரங்கன் கொள்கை கொண்டே வையகத்தை ஆறுமுகன் மாற்ற உள்ளேன்
   உள்ளபடி அரங்கனுள் யான் இருந்தே
   உலகமெங்கும் சன்மார்க்க நெறிபரப்பி
3. பரப்பியே இந்த கலித்துன்பங்களை விரட்டுவேன்
   பரோபகாரம் நிரப்பி உலகோரிடை
   கருணைஎனும் மகா சக்தி குறைவில்லா வளர
   கந்தவேலன் யானும் பரிபூரணமாய் அருள்புரிவேன்
4. அருளவே அரங்கமகானே கலியின்
   ஆக்கினை நீக்கும் சிறந்த ஞானி
   வகைபட அன்னதனால் உலகோர்
   வணங்கி அரங்கன் குடில் நோக்கி வந்தால்
5. வந்திட உலகமாற்றம் சடுதி காணும்
   வருபவர்க்கு ஞான சித்தி உறுதியாகி
   வையகமே பெரும் பாதுகாப்புப் பெறும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–